வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 06 15.10.2025 புதன்கிழமை இதழ் : 288 பக்கங்கள் : 08




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை


# போர்க்குற்றங்கள் குறித்து சாட்சியம் அளிக்கத் தயார்!

## சோமரத்ன ராஜபக்ஷவின் சத்தியக் கடதாசி ஐ.நா. மனித உரிமை பேரவையில் கையளிப்பு

கொழும்பு, ஒக்ரோபர் 15

பாடசாலை மாணவி கிருஷாந்தி குமார சுவாமி படுகொலை மற்றும் 1996 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரால் நிகழ்த்தப்பட்ட சகல போர்க்குற்றங்கள் தொடர்பிலும் உள்நாட்டு நீதிமன்றத்திலோ அல்லது சர்வதேச நீதிமன்றத்திலோ அல்லது ஏதேனும் அமைப்புக்கள் முன்னிலையிலோ சாட்சியம் அளிப்பதற்குத் தயாராக இருப்பதை உறுதிப்படுத்தி மரண தண்டனைக் கைதி லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவினால் சிறைச்சாலையில் இருந்து அவரது சட்டத்தரணி ஊடாக வழங்கப்பட்டுள்ள சத்தியக்கடதாசி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்திடம் கையளிக்கப்பட்டிருப்பதுடன், அதன் பிரதி இவ்வாரம் இலங்கை தொடர்பான பொறுப்புக் கூறல் செயற்திட்டத்தின் அதிகாரிகளிடம் கையளிக்கப் படவுள்ளது.

07



## இந்திய முதலீடு, நன்கொடை வீட்டுத்திட்டம் பற்றி ஆராய்வு!

### ரில்வின் சில்வா - சந்தோஷ் ஜா பேச்சு

கொழும்பு, ஒக். 15

இந்திய தூதுவர் சந்தோஷ் ஜாவுக்கும், மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவுக்கும் இடையிலான சுமுகமான கலந்துரையாடல் நேற்று முன் தினம் பிற்பகல் மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை அலுவலகத்தில் இடம் பெற்றது.

இச்சந்திப்பில் இந்திய தூதரகத்தை

07

## ராஜீவின் இலங்கை கொள்கை சரிவு; இந்திய இராணுவத்தினரே காரணம்!

### மணி சங்கர் ஐயர் குற்றச்சாட்டு

சென்னை, ஒக். 15

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின், இலங்கை தொடர்பான கொள்கையின் சரிவுக்கு இந்திய இராணுவமே காரணம் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

முன்னாள் மத்திய அமைச்சரும் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவருமான மணி சங்கர் ஐயர் இந்தக் குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளார்.

07



### கணேமுல்ல சஞ்சீவ கொலை விவகாரம்

## இஷாரா செவ்வந்தியுடன் யாழ்.தம்பதி நேபாளத்தில் வைத்து நேற்றுக் கைது!

கொழும்பு, ஒக். 15

கணேமுல்ல சஞ்சீவ கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த இஷாரா செவ்வந்தி நேபாளத்தில் வைத்து கைதுசெய்யப்பட்ட நிலையில் அவருடன் சேர்த்து யாழ்ப்பாணத்தை சேர்ந்த தம்பதியினரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கைது செய்யப்பட்டவர்கள் இன்று நாட்டுக்கு அழைத்து வரப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் துறை, மேற்கு மாகாண வடக்கு குற்றப் பிரிவு மற்றும் நேபாள பாதுகாப்புப் படையினர் நடத்திய சிறப்பு கூட்டு நடவடிக்கையில் இஷாரா செவ்வந்தி

07



## இரண்டாவது நாளாகவும் ஆசிரியர்கள் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஒக். 15

இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக நேற்றுமுன்தினம் முதல் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்றைய போராட்டத்தை வலுப்படுத்தும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர்களான

07

## வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகக் கூறி யாழ்ப்பாணத்தில் 30 கோடி ரூபா மோசடி!

### அரியாலைப் பகுதியில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 15

வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகக் கூறி, 30 கோடி ரூபா நிதியை அபகரித்த நபர் ஒருவர், யாழ்ப்பாணம் நிதிக் குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அரியாலைப் பகுதியைச் சேர்ந்த 38 வயதான அல்பிரேட் எட்வேட் ரொசான் என்பவர் இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்தில், குறித்த நபர் தொடர்பில் தலா நான்கு முறைப்பாடுகள், பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு

07

## ஆளுநர்கள் மாற்றமும் எந்நேரமும் நடக்கலாம்

கொழும்பு, ஒக். 15

தன்னுடைய பதவிக் காலத்தில் முதல் ஆண்டைப் பூர்த்தி செய்துள்ள கட்டத்தில் முதல் தடவையாகக் கடந்த வெள்ளிக்கிழமையன்று அமைச்சரவை மாற்றத்தை மேற்கொண்ட ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அடுத்து எந்நேரமும் தமது மாகாண ஆளுநர்களில் மாற்றங்களைச் செய்யக்கூடும் என தெரிவிக்கப்படுகின்றது.

ஒவ்வொரு மாகாணத்தினதும் ஆளுநர்களின் செயற்பாடுகள், பெறுபேறுகள், நடவடிக்கை முன்னேற்றங்கள் தொடர்பில் ஜனாதிபதி செயலகம் மதிப்பீடுகளைத் தயாரித்து வருகின்றது என தெரியவருகிறது.

அவற்றின்

07

## எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு மின் கட்டணத்தில் மாற்றமில்லை!

### பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

கொழும்பு, ஒக். 15

மின்சார கட்டணத்தில் எதிர்வரும் 3 மாதங்களுக்கு எந்தவித மாற்றங்களும் மேற்கொள்ளப்படமாட்டாது என இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

07

## கோப்பாய் பொலிஸ் நிலையக் காணி இன்று உரிமையாளர்களிடம் கையளிப்பு!

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஒக். 15

கோப்பாய் பொலிஸ் நிலையம் அமைந்துள்ள காணியை அதன் உரிமையாளர்களிடம் கையளிக்குமாறு நீதிமன்றம் கட்டளையிட்டுள்ள நிலையில், இன்று புதன்கிழமை நீதிமன்றத்தின் மூலம் குறித்த காணி உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

கோப்பாய், இராசபாதையில் அமைந்துள்ள கோப்பாய் பொலிஸ் நிலைய காணி கடந்த 30 வருடங்களாக பொலிஸாரின் கட்டுப்பாட்டிலும், பயன்பாட்டிலும் உள்ளது.

அந்த காணியின் உரிமையாளர்கள், காணியை தம்மிடம் கையளிக்குமாறு பல்வேறு தரப்பினரிடம் கோரிக்கை விடுத்து வந்தனர். எனினும், அதற்குப் பலன் கிட்டவில்லை.

இந்த நிலையில், 2019 ஆம் ஆண்டு, காணி களுக்கு

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செட்டிகுளம் பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டத்துக்கு தலைவரை செல்லவிடாது தடுத்தனர் உறுப்பினர்கள்!

வவுனியா, ஒக். 15

செட்டிகுளம் பிரதேச அபிவிருத்தி குழு கூட்டம் இன்று செட்டிகுளம் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற போது அங்கு வருகை தந்த அபிவிருத்தி குழு தலைவரும் கூட்டுறவு பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்கவை உள்ளே செல்லவிடாது செட்டிகுளம் பிரதேச சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்கள் தடுத்து நிறுத்தினர்.

செட்டிகுளம் பிரதேச சபையின் அபிவிருத்திக் குழு கூட்டத்தில் பிரதேச சபை தலைவர் உட்பட அவர் கட்சி சாராத இருவரை கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலாளரால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

எனினும் வட்டார உறுப்பினர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் என்ற ரீதியில் அனைத்து சபை உறுப்பினர்களையும் பிரதேச அபிவிருத்தி குழு கூட்டத்துக்கு அனுமதிக்க வேண்டும் என தெரிவித்து செட்டிகுளம் பிரதேச ஆளுங் கட்சி உறுப்பினர்கள் கறுப்பு உடை அணிந்து பிரதேச செயலக வாயிலில் கூடியிருந்தனர்.

இதன்போது வருகை தந்த பாராளுமன்ற உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், காதர் மஸ்தான், முத்து முகமது ஆகியோரை அனுமதித்த பிரதேச சபை உறுப்பினர்கள், அவர்களோடு பிரதேசசபை வளாகத்தில் நீண்ட நேரம் கலந்துரையாடி இருந்தனர்.

இதன் பின்னர் அங்கு வருகை தந்த அபிவிருத்திக் குழுத் தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்கவின் வாகனத்தை பிரதேச செயலகத்துக்குள் நுழைய விடாது சபை உறுப்பினர்கள் தடுத்து நிறுத்தி இருந்தனர்.


இதன் போது தங்களையும் கூட்டத்துக் அனுமதிக்கவேண்டுமென பிரதேச சபை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதன் போது கருத்து தெரிவித்த அவ்விருத்திக் குழுத் தலைவர்-

இது அரசியல் செயற்பாடு அல்ல. பாராளுமன்றத்தினால் கொண்டுவரப்பட்ட ஒரு நடைமுறை. ஆகவே இந்த விடயம் பாராளுமன்றத்தின் ஊடாகவே செயல்படுத்தப்பட வேண்டும். ஆகவே இங்கே உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் இது தொடர்பில் பாராளுமன்றத்தில் கதைத்து இதற்கான தீர்வை பெற்றுக் கொள்ள வேண்டும். இல்லையேல் நீதி மன்றத்தை நாட வேண்டும் என்று தெரிவித்தார்.

பிரதேச சபை உறுப்பினர்கள் மீண்டும் இந்த விடயம் தொடர்பில் சுட்டிக்காட்டி தர்க்கத்தில் ஈடுபட்ட நிலையில் குறித்த கூட்டத்துக்கு அனைத்துப் பிரதேச சபை உறுப்பினர்களும் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டது.

(அ)



# வெளிநாட்டு இராணுவ அதிகாரிகள் யாழில் பல இடங்களுக்கும் விஜயம்

யாழ்ப்பாணம், ஒக். 15

வெளிநாடுகள் பலவற்றின் இராணுவ அதிகாரிகள் நேற்று முன் தினம் மாலை இலங்கை இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளனர். சுமார் 30 பேர் வரை இங்கு வருகை தந்துள்ளதோடு யாழ்.குடாநாட்டின் பல இடங்களுக்கும் பயணிக்கின்றனர்.

குடாநாட்டின் கரையோரக் கிராமங்களுக்கு பயணிக்கும் இவர்கள், இன்று நெடுந்தீவுக்கு பயணிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# முல்லைத்தீவு மாவட்ட செயலரை சந்தித்து பேசினார் ரவிகரன் எம்.பி.


முல்லைத்தீவு, ஒக. 15

முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் அ.உமாமகேஸ்வரன் மற்றும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோருக்கிடையில் நேற்று முன் தினம் சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளது.

இச்சந்திப்பில் முல்லைத்தீவு மாவட்டத்தின் விளையாட்டுத் துறை மேம்பாடு தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுத்தல், முல்லைத்தீவு நகரில் மணிக்கூட்டுக் கோபுரம் அமைத் தல், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வெள்ளப்பள்ளம் பகுதியில் சட்டவிரோதமாக காடுகள் அழிக்கப்பட்ட விவகாரத்துக்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# வவுனியா உணவகங்களில் நேற்று திடீர் சுற்றிவளைப்பு



வவுனியா, ஒக். 15

வவுனியா குருமன்காட்டு சந்தியில் உள்ள உணவகங்களில் சுகாதார பரிசோதகர்கள் நேற்று திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அந்தப் பகுதியில் இயங்கி வரும் உணவகம் ஒன்றில் நேற்று முன்தினம் கொள்வனவு செய்யப்பட்ட கோழி இறைச்சியில் புளுக்கள் இருந்துள்ளமை தொடர்பாக வவுனியா மாநகரசபைக்கு முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது.

அதற்கமைய நேற்றுக் காலை மாநகரசபையின் பிரதி முதல்வர் ப.கார்த்தீபன், உறுப்பினர் சிறிஅருணன் மற்றும் சுகாதார பரிசோதகர்கள் அந்த பகுதிக்கு விஜயம் செய்திருந்ததுடன் அங்கிருந்த உணவங்கள் மீது திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது உணவகம் ஒன்றில் சுகாதார சீர்கேடான முறையில், உண்பதற்கு ஒவ்வாத கோழி இறைச்சி மற்றும் உணவுப்பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது.

குறித்த உணவுப்பொருட்கள் சுகாதாரப் பிரிவினரால் பறிமுதல் செய்யப்பட்டதுடன், அந்த உணவகம் மீது நீதிமன்றில் வழக்குதாக்கல் செய்வதற்கான நடவடிக்கை முன்னெடுப்பட்டது.

அத்துடன் சுகாதார நடைமுறைகளை பேணாமல் உணவங்களில் பணியாற்றும் ஊழியர்கள் தொடர்பாகவும் இதன்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

(அ)

# தனியார் காணிக்குள் வெடிக்காத கைக்குண்டு!

கிளிநொச்சி, ஒக். 15

தர்மபுரம் பகுதியில் தனியார் காணி ஒன்றில் வெடிக்காத நிலையில் கைக்குண்டு இனங்காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த காணியில் நேற்று முன் தினம் துப்புரவுப் பணிகளை மேற்கொண்டபோது வெடிக்காத நிலையில் கை குண்டு ஒன்று இருப்பது அவதானிக்கப்பட்டது.

அதனையடுத்து இச்சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. தவலுக்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த தர்மபுரம் பொலிஸார் கைக்குண்டை அவதானித்தனர்.

அதன்பின்னர் இச்சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி நீதிமன்ற அனுமதியுடன் அப் பகுதியில் இருந்து கைக்குண்டை பாதுகாப்பாக அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்தனர். (அ)

# ‘கடந்த காலத்தின் நிழல்கள்’ கண்காட்சி யாழில்!



யாழ்ப்பாணம், ஒக். 15

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சர்வதேச விருதுபெற்ற ஆவணப்பட புகைப்படக் கலைஞர் தர்மபாலன் திலக்சனின் ‘கடந்த காலத்தின் நிழல்கள்’ புதிய புகைப்படக் கண்காட்சி கடந்த 8 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை இல, 50 கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலம் கலாசார மையத்தில் நடைபெறும்.

இந்தக் கண்காட்சி இலங்கையின் உள்நாட்டுப் போருக்குப் பிறகு நிலங்கள், வீடுகள், மக்களின் நினைவுகளில் பதிந்த காயங்களையும் அமைதியான நினைவுகளையும் பதிவு செய்கிறது.

போரின் நேரடி காட்சிகளுக்கு அப்பால், அதன் நிழல்களில் வாழும் மக்களின் உணர்வுகளையும் மனநிலையையும் திலக்சன் தனது புகைப்படங்களின் வழியே வெளிப்படுத்தியுள்ளார். (அ)

# மணல் மேடு சரிந்து ஒருவர் உயிரிழப்பு!

மன்னார், ஒக். 15

மன்னார், முருங்கன் - இசமலாதவுல் பகுதியில் மணல் மேடு சரிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக முருங்கன் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் மன்னார் - மடு பகுதியைச் சேர்ந்த 42 வயதுடையவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் மல்வத்து ஒயா அருகே, நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மணல் தோண்டிக் கொண்டிருந்தபோது மண் மேடு சரிந்து விழுந்ததில் இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சடலம் மன்னார் வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் குறித்து முருங்கன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# மூக்கு கண்ணாடி வழங்கும் நிகழ்வும் ‘பொற்பணி செம்மல்’ விருது வழங்கலும்

யாழ்ப்பாணம், ஒக். 15

வட மாகாண தந்தை செல்வா நற்பணி மன்றம் வேதம் மூளாய் பகுதியில் கண்பரிசோதனை செய்தவர்களுக்கான மூக்கு கண்ணாடி வழங்கும் நிகழ்வும் விருது வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8:30 மணிக்கு நடைபெறவுள்ளது.

தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் நடத்தப்படும் இந்நிகழ்வில் சிறீ மீனாட்சி அம்மன் அறநெறி பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளதோடு, முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன், வலிகாமம் மேற்கு பிரதேச சபை தவிசாளர் ச.ஜெயந்தன், வலிகாமம் மேற்கு பிரதேச சபை உப தவிசாளர் க.இலங்கேஸ்வரன், சிறப்பு விருந்தினராக மூளாய் சைவப் பிரகாச வித்யாசாலையின் அதிபர் பா. பாலசுப்பிரமணியம், கௌரவ விருந்தினராக சட்டத்தரணி எஸ்.சிவபாலசுப்பிரமணியம், மூளாய் கிராமசேவகர் சிவரூபன்,வலிகாமம் மேற்கு பிரதேசசபை உறுப்பினர் நாகரஞ்சனி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும்,இப்பிரதேசத்தில் சமூக செயற்பாட்டாளர்களாக விளங்கும் ச.சின்னையா, மா. கணநாதன் மற்றும் ஆ.ஜெயராஜ் ஆகியோர் “பொற்பணி செம்மல்” விருது வழங்கி கௌரவிக்கப்பட உள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
15.10.2025 புதன்கிழமை
விசுவாவசு வருடம், புரட்டாதி 29
"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.
E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# எதிர்ப்பது இலகு ஆனால், கையாள்வது கடினம்

எப்போதுமே ஒரு விடயத்தை எதிர்ப்பது மிகவும் இலகுவானது. எதிர்ப்பதை எவரும் செய்யலாம். ஆனால், ஒரு விடயத்தை வெற்றி நோக்கி கையாள்வது மிகவும் கடினமானது. ஒரு விடயத்தை வெற்றி நோக்கிக் கையாள்வதற்கு பரந்த அறிவும் ஆற்றலும் ஆளுமையும் தேவை. இந்த விடயங்கள் இல்லாதபோது எதிர்த்து நிற்பது இலகுவாகிறது. மன்னார் காற்றாலை விவகாரம் இதற்கு சிறந்த உதாரணமாகும். உலகிலேயே சுற்றுச்சூழலுக்கு மிகவும் நெருக்கமான திட்டம் என்றால் அது காற்றாலை திட்டம்தான். ஆனால், அதனையே சுற்றுச்சூழலுக்கும் மக்களின் வாழ் நிலைக்கும் சிக்கலானது என்பதாக ஓர் அபிப்பிராயம் உருவாக்கப்படுகிறது.

திருகோணமலை சம்பூரில் அனல் மின் நிலையம் ஒன்றை நிர்மாணிக்க முற்பட்டபோது அந்தப் பகுதியை சேர்ந்தவர்களால் அந்தத் திட்டம் எதிர்க்கப்பட்டது. அப்போதும் சுற்றுச்சூழல் சார்ந்தே காரணம் கூறினர். அது ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது. காரணம், ஒப்பீட்டு அடிப்படையில் அனல் மின் நிலையம் சுற்றுச்சூழலுக்கு தீங்கானது. இதேவேளை, அனல் மின்நிலையம் அமைக்கப்படும் இடங்களுக்கு அருகாமையில் மக்கள் வாழ்வது சுகாதார அடிப்படையில் ஆபத்தானது. பின்னர் குறித்த திட்டம் கைவிடப்பட்டது. அதற்குப் பதிலாக சூரிய மின்கலம் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஒரு விடயம் எவ்வாறு கையாளப்பட வேண்டும். இதேவேளை எவ்வாறு கையாளப்படக்கூடாது என்பதற்கு மன்னார் காற்றாலை திட்டம் சிறந்த உதாரணமாகும். வடக்கு, கிழக்கை நோக்கி ஒரு முதலீடு வருகின்றபோது, பாதகங்களைக் குறைத்து இருவருக்கும் வெற்றியென்னும் அடிப்படையில் எவ்வாறு கையாள்வது என்று சிந்திப்பதும் செயல்படுவதும்தான் புத்திசாதுரியமானது.

எந்தவொரு திட்டத்திலும் சாதகம், பாதகம் என்று ஒன்றுண்டு. அதனை ஆழமாக மதிப்பிட்டு, பாதகங்கள் என்று கருதப்படுபவைகளை முடிந்தவரை மிகக் குறைத்து - குறித்த திட்டத்திலிருந்து அடையக் கூடியதை அடைய முயற்சிப்பதுதான் அரசியல் கலை. ஆனால், நமது சூழலில் நடப்பதோ வேறு. எந்தவொரு மாற்று உபாயங்களுமின்றி அனைத்தும் எதிர்க்கப்படுகின்றன. வடக்கு - கிழக்குக்குள் வருகின்ற திட்டங்களை கண்மூடித்தனமாக எதிர்ப்பதால் இறுதியில் என்ன நடைபெறும் என்பதை உணராமலேயே அனைத்தும் முன்னெடுக்கப்படுகின்றன. மக்களுக்கு புத்திபுகட்டி, வழிநடத்த வேண்டியவர்களோ கூட்டத்தோடு கோவிந்தா என்னும் நிலையில் இருக்கின்றனர்.

உண்மையில், வடக்கு - கிழக்கை நோக்கி முதலீடுகள் வருகின்றபோது, அதனை எவ்வாறு எதிர்கொள்வது என்னும் வழிவரைபடம் ஒன்று அரசியல் கட்சிகளிடம் இருக்க வேண்டும். ஆனால், வழிவரைபடமா - அப்படியென்றால் என்ன என்று கேட்கும் நிலையிலேயே தமிழ் கட்சிகள் இருக்கின்றன. மன்னார் காற்றாலை விவகாரத்தை அந்தப் பகுதியை பிரதிநிதித்துவம் செய்யும் மக்கள் பிரதிநிதிகள் எவ்வாறு கையாள்கின்றனர் என்பதை உற்று நோக்குவதிலிருந்து, அவர்களுடைய ஆளுமையை புரிந்துகொள்ள முடியும். அடுத்த தேர்தலில் தங்களின் வாக்கு வங்கிக்கு சிக்கல்கள் ஏற்பட்டு விடக்கூடாதென்னும் நோக்கிலேயே அரசியல்வாதிகள் கணக்கும் போடுகின்றனர். இது மிகவும் மோசமானதோர் அரசியல். ஆனால், இந்த நிலைமைதான் தொடர்கிறது.

வடக்கு - கிழக்கை நோக்கி முதலீடுகள் வருகின்றபோது அதனை தமிழ் தலைமைகள் என்போர் வரவேற்க வேண்டும். பாரதூரமான சுற்றுச்சூழல் பிரச்னை விஞ்ஞானபூர்வமாகக் கண்டறியப்பட்டால், அதனை நிவர்த்தி செய்வதற்கான மாற்று யோசனைகளை முன்வைக்கலாம். அதனை பூர்த்திசெய்துவிட்டு திட்டத்தை முன்னெடுக்குமாறு கோரலாம். காற்றாலை பல நாடுகளில் மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகிறது.

நோர்வே, நெதர்லாந்து போன்ற நாடுகள் இதில் முன்னேற்றகரமான உதாரணமாக இருக்கின்றன. காற்றாலை மற்றும் சூரியமின்கல திட்டத்தை நோக்கி வளர்ச்சியடைந்த நாடுகள் முழுவதும் நகர்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால், நமது சூழலிலோ அது எதிர்க்கப்படுகிறது. இது, அடிப்படையில் காற்றாலை தொடர்பான பிரச்னை அல்ல. மாறாக, வடக்கு - கிழக்கை நோக்கி முதலீடுகளைக் கொண்டுவருவதுடன் தொடர்புடைய பிரச்னை. முதலீடுகள் எதிர்க்கப்பட்டால், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வடக்கு - கிழக்கை நோக்கி வரமாட்டார்கள். இதனால் யாருக்கு பாதிப்பு?

# 12 நாட்களில் 62,000 சுற்றுலாப் பயணிகள்!



கொழும்பு, ஒக். 15

இந்த மாதத்தின் முதல் 12 நாட்களில் நாட்டுக்கு 62,741 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது.

இதன்படி, இந்தியாவில் இருந்து மொத்தம் 18,299 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். இது 29.2 வீதமாக பதிவாகியுள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது.

மேலும், ஒக்ரோபர் மாதத்தில் சீனாவிலிருந்து 5,417 பேரும், ஐக்கிய இராச்சியத்திலிருந்து 4,874 பேரும், ஜேர்மனியிலிருந்து 3,804 பேரும் மற்றும் அவுஸ்திரேலியாவிலிருந்து 2,954 பேரும் வருகை தந்துள்ளனர்.

அதன்படி, இவ் ஆண்டின் இதுவரையாக காலப் பகுதியில் நாட்டுக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1,788,235 ஆக அதிகரித்துள்ளது.

அவர்களில், இந்தியாவிலிருந்து 292,633 பேரும், இங்கிலாந்திலிருந்து 166,767 பேரும், ரஷ்யாவிலிருந்து 125,035 பேரும், ஜேர்மனியிலிருந்து 110 பேரும் மற்றும் சீனாவிலிருந்து 107,007 பேரும் வருகை தந்துள்ளனர்.

செப்ரெம்பர் மாதத்தில் மொத்தமாக 158,971 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். இதனை 2024 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாத தரவுகளுடன் ஒப்பிடும்போது 30.2 வீதமாக பதிவாகியுள்ளது. (அ)

# கொழும்பு தேசிய வைத்தியசாலையில் 3 எம்.ஆர்.ஐ ஸ்கானர்கள் செயலிழப்பு!

கொழும்பு, ஒக். 15

கொழும்பு தேசிய வைத்தியசாலையிலுள்ள மூன்று எம்.ஆர்.ஐ ஸ்கானர்கள் செயலிழந்துள்ளதாக அரசாங்க கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ஒரேயொரு எம்.ஆர்.ஐ ஸ்கானர் மட்டும் செயல்பாட்டில் உள்ளதாக சங்கத்தின் தலைவர் சானக தர்மவிக்ரம தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

இந்தச் சூழ்நிலையால் நோயாளி பராமரிப்பு சேவை கள் கடுமையாக பாதிக்கப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அதேபோல் கண்டி வைத்தியசாலையில் சிறுநீரக கற்களை உடைக்கும் இயந்திரம் ஒரு வருடத்துக்கு முன்பு வாங்கப்பட்டு இன்னும் பயன்படுத்தப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# மனுஷ தாக்கல் செய்த முன்பிணை மனு தள்ளுபடி!

கொழும்பு, ஒக். 15

முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார தாக்கல் செய்த முன்பிணை மனுவை கொழும்பு நீதவான் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

கடந்த அரசாங்கத்தின் போது விவசாயத்துறை வேலைவாய்ப்புக்காக இஸ்ரேலுக்கு பணியாளர்களை அனுப்புவதில் ஏற்பட்ட முறைகேடு தொடர்பாக இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு விசாரணை நடத்திவருகிறது.

குறித்த விசாரணை தொடர்பாக கைது செய்யப்படுவதை தவிர்க்க முன்பிணை கோரி மனுஷ நாணயக்கார இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார். (அ)

# நிஷாந்த உலுக்கேதென்னவுக்கு பிணை

கொழும்பு, ஒக். 15

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் கடற்படைத் தளபதி நிஷாந்த உலுக்கேதென்னவை பிணையில் விடுதலை செய்யமாறு குருநாகல் நீதவான் நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் கடற்படைத் தளபதி நிஷாந்த உலுக்கேதென்ன நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடற்படைத் தளபதியாக நிஷாந்த உலுக்கேதென்ன கடமையாற்றிய காலத்தில் குருநாகல் - பொத்துஹெர பிரதேசத்தில் இளைஞன் ஒருவன் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளின் அடிப்படையில், நிஷாந்த உலுக்கேதென்ன கடந்த ஜூலை மாதம் 28 ஆம் திகதி குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். அவர் நேற்று பிணையில் விடுதலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**

எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். தாயாருக்கு மருத்துவச் செலவுகள் வந்து போகும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். சக ஊழியர்களால் நிம்மதி கிடைக்கும். உயரும் நாள்.

**இடபம்**

குடும்பத்தோடு சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். உறவினர்கள் பாராட்டும்படி நடந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். தைரியம் கூடும் நாள்.

**மிதுனம்**

இதுவரை இருந்த சோர்வுகளைப்பு யாவும் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரம் சூடு பிடிக்கும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் தேங்கிக் கிடந்த பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**கடகம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம். குடும்பத்தில் எதிர்பாராத செலவுகள் வந்துபோகும். உத்தியோகத்தில் மறதியால் பிரச்னை வந்து நீங்கும்.

**சிம்மம்**

விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். ஆதாயம் தரும் நாள்.

**கன்னி**

பழைய கடனில் ஒரு பகுதியைபைசல் செய்வீர்கள். அரசாங்க விஷயம் நல்ல விதத்தில் முடியும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள்.

**துலாம்**

எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உறவினர் நண்பர்களுடன் மனம் விட்டு பேசுவீர்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள்.

**விருட்சிகம்**

கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் லாபம் வரும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**தனுசு**

சந்திராஷ்டமம் இருப்பதால் வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். வியாபாரத்தில் புதுமுயற்சிகள் வேண்டாம். உத்தியோகத்தில் மறைமுக விமர்சனங்கள் உண்டு.

**மகரம்**

கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள்.

**கும்பம்**

பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும்.

**மீனம்**

குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். உறவினர்களில் உண்மையானவர்களை கண்டறிவீர்கள். வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள்.

# விசேட தேவையுடையோருக்கான தேசிய விழா இம்முறை யாழில்

யாழ்ப்பாணம், ஒக். 15

விசேட தேவையுடையோருக்கான தேசிய விழா இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. வடமாகாணத்தின் 5 மாவட்டங்களில் இருந்து விசேட தேவையுடையோர் சுமார் 650 பேரின் பங்குபற்றுதலுடன் யாழ்ப்பாணம் கலாசார மண்டபத்தில் இந்த நிகழ்வை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விசேட தேவையுடையோருக்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி ஜனாதிபதியின் பங்குபற்றுதலுடன் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள விசேட தேவையுடையோருக்கான தேசிய விழா தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் மாவட்ட செயலக அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (எ)

## அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அரச அதிபரிடம் மகஜர் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 15

வெளி மாவட்டங்களில் கடமையாற்றும் வட மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் யாழ். மாவட்ட அரச அதிபரிடம் மகஜர் கையளித்துள்ளனர்.

ஐந்து வருடங்களுக்கு மேலாக வெளிமாவட்டங்களில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சொந்த வருடாந்த இடமாற்றத்துக்கு விண்ணப்பித்தும் இடமாற்றம் கிடைக்கப்பெறவில்லை. இதேவேளை, 13 வருடங்கள் கடந்தும் சில அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எந்த வித இடமாற்றமும் இன்றி சொந்த மாவட்டத்தில் தொடர்ந்தும் கடமையாற்றி வருவதாக தெரிவித்ததோடு தமக்கான முறையான நியாயமான இடமாற்றக் கோரிக்கை மகஜர் ஒன்றை வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனிடம் கையளித்தனர். (எ)

## கிராமிய வீதிகள் அபிவிருத்தி பற்றி கலந்துரையாடல்

கிராமிய வீதிகள் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

18.09.2025 அன்று நடைபெற்ற போக்குவரத்து தொடர்பான யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் தீவக பகுதிகளுக்கு 250 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்திருந்தார். இதற்கிணங்க பிரதேச செயலாளர்களிடமிருந்து திருத்தப்பட வேண்டிய வீதிகளின் பட்டியல்கள் திரட்டப்பட்டு அரசாங்க அதிபரால் அமைச்சுக்கு அனுப்பப்பட்டு அமைச்சால் அதற்குரிய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலில் வேலணை, ஊர்காவற்துறை, காரைநகர் மற்றும் நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இந்த வருடத்துக்கான கிராமிய வீதிகளின் அபிவிருத்திக்காக விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள வீதி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை விரைவாக முன்னெடுப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டதோடு குறிப்பாக வீதி அபிவிருத்திகள் உரிய காலத்தில் வினைத்திறனாக நிறைவேற்றி முடிக்க அரசாங்க அதிபரால் உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. (எ)

## கர்ப்பவதி பெண்களுக்கான பிரசவகாலப்பொதி வழங்கல்

யாழ்ப்பாணம், ஒக். 15

பெரண்டீனா லயிப் லைன் நிறுவனத்தின் அனுசரணையில் கர்ப்பவதி பெண்களுக்கான பிரசவகாலப்பொதி யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனால் நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் வைத்து வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அரசாங்க அதிபர் கூறுகையில், கர்ப்பவதி பெண்களுக்கான பிரசவகாலப்பொதி வழங்கி வைத்த பெரண்டீனா லயிப் லைன் நிறுவனத்துக்கு நன்றிகள். இந்த உதவித்திட்டத்தை சரியான வகையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். கர்ப்பவதிகளும் அவர்களின் கருவிலுள்ள குழந்தையும் ஆரோக்கியமாக இருப்பதற்காகவே இப்பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. அரசாங்கத்தாலும் கர்ப்பவதிகளுக்கு உணவுமுத்திரைகள் வழங்கப்படுவதன் நோக்கம் கர்ப்பவதி பெண்களும் அவர்களின் கருவில் வளரும் குழந்தையும் ஆரோக்கியத்துடன் இருப்பதனூடாக இவ் சமுதாயத்தை உடல், உள ஆரோக்கியமான சமுதாயமாக மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதே ஆகும். எல்லோரும் ஒன்றிணைந்து நோக்கத்தை உணர்ந்து ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க வேண்டும்- என்றார்.

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் , சாவகச்சேரி ஆகிய பிரதேச செயலகங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 20 கர்ப்பவதி பெண்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பிரசவ காலப்பொதிகள் வழங்கப்பட்டன. (எ)

## இடியுடன் கூடிய மழை பெய்யும்

கொழும்பு, ஒக். 15

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பிற்பகல் 01.00 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேற்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் சுமார் 100 மில்லிமீற்றர் வரையிலான பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல் மற்றும் தெற்கு மாகாணங்களிலும் காலை வேளைகளில் மழை பெய்யக்கூடும்.

மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## உடுவில் பிரதேச செயலகத்துக்கு புதிய பிரதேச செயலர் நியமனம்



யாழ்ப்பாணம், ஒக். 15

உடுவில் பிரதேச செயலகத்துக்கு புதிய பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்ட திருமதி பிறேமினி பொன்னம்பலம், நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனிடம் தமக்கான நியமனக் கடிதத்தை பெற்றுக்கொண்டார்.

இவர் முன்னர் சங்கானை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளராக கடமையாற்றியிருந்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் கடத்தலை தடுக்கவா பிமலிடமிருந்து அமைச்சு பறிக்கப்பட்டது?

## பொதுஜன பெரமுன கேள்வி

**கொழும்பு, ஒக். 15**

**ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க போதைப்பொருள் நாட்டுக்குள் வருவதைத் தடுப்பதற்கான முக்கிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பதுளையில் தெரிவித்திருந்தார். அவ்வாறெனில், பிமல் ரத்நாயக்கவிடமிருந்து துறைமுக அமைச்சு நீக்கப்பட்டமைதான் அந்த நடவடிக்கையா? - இவ்வாறு சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் கேள்வி எழுப்பியுள்ளார்.**



பெரமுனவின் கட்சி தலைமையகத்தில் நடந்த ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், கடந்த வாரம் இடம்பெற்ற அமைச்சரவை மாற்றம் ஒரு முக்கிய விடயமாகும். இதற்கு முன்னர் எமது அரசாங்கங்கள் இருந்தபோது அமைச்சரவை மாற்றங்களை செய்தபோது, அது தொடர்பாக தொடர்ந்து பல்வேறு குற்றச்சாட்டுகளையும், கேலியான கருத்துகளையும் கூறிய ஜே.வி.பி.யினருக்கு இன்று அதே நிலைமை ஏற்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் நீங்கள் மீண்டும் ஒரு முறை ஏமாற்றப்பட்டுள்ளீர்கள் என்று நாட்டு மக்களுக்கு கூறிக்கொள்ள விரும்புகிறோம். இந்நிலையில், முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு தற்போது நாட்டில் போதைப்பொருள் புழக்கம் அதிகரித்துள்ளது. அவ்வாறான சூழல் இந்த அரசாங்கத்தாலேயே ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த குற்றச்சாட்டுக்களை ராஜபக்ஷர்கள் மீது சுமத்த முயன்ற போதிலும், பின்னர் அரசாங்கத்தின் சதித்திட்டம் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க மலையகத்தில் கடந்த நல்லாட்சிக் காலத்தில் இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்டு கட்டப்பட்டிருந்த சில வீடுகள் தொடர்பான நிகழ்வில் கலந்துகொண்டு, அங்கு இந்த போதைப்பொருள் அச்சுறுத்தல் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய முதல்படி எடுக்கப்பட்டுவிட்டதாகக் கூறினார். ஆனால், எமக்குத் தெரியவரும் முதல் படி என்னவென்றால், பிமல் ரத்நாயக்க துறைமுக அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டமைதான்.

கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமைக்கும் நாட்டில் போதைப்பொருள் பயன்பாட்டுக்கும் இடையில் தொடர்பு இருக்கிறதா? இல்லையா? என்பதை மிகவும் ஆழமாக ஆராய வேண்டியது கட்டாயமாகும். எவ்வாறிருப்பினும், இலங்கை வரலாற்றில் இதுவரை செய்யப்பட்ட மிகப் பெரிய மோசடி செயல் இது என்பதை நாம் மக்களிடம் தெரிவிக்கின்றோம் - என்றார். (ஐ)

# பிரான்ஸ் தூதுவரை நேற்று சந்தித்தார் ரில்வின் சில்வா

கொழும்பு, ஒக். 15


பிரான்ஸ் தூதுவர் ரெமி லெம்பர்டுக்கும் , மக்கள் விடுதலை முன்னணியின் பொது செயலாளர் ரில்வின் சில்வாவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் பெலவத்தையிலுள்ள ஜே. வி. பி. தலைமை பணிமனையில் நடைபெற்றது.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவை முதன்மையாகக் கொண்ட தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்த பின்னர் முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத்திட்டம் குறித்தும் பிரான்ஸ் தூதுவர் வாழ்த்துகளை தெரிவித்தார்.

குறிப்பாக பிரான்ஸ் மற்றும் இலங்கைக்கு இடையில் நிலவுகின்ற இராஜதந்திர உறவுகளை எதிர்காலத்தில் மேலும் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன்போது, மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, தேசிய மக்கள் சக்தியின் கொள்கைப் பிரகடனத்தின் அடிப்படையில் ஊழல் மோசடியை தடுப்பதற்கும் நிதி வீண்விரயத்தை குறைப்பதற்கும் நிறைவடைந்த காலப்பகுதியில் அதிக கவனம் செலுத்தப்பட்டதாகவும் 2026 ஆம் ஆண்டாகும் போது பொருளாதாரத்தை வலிமைபெற செய்விட்டதற்கும் அதை நிலையாக வைத்துக்கொள்வதற்குமான நோக்கத்துடன் தாம் செயல்படுகிறார் என்றும் சுட்டிக் காட்டினார்.

பிராண்ஸ் மற்றும் இலங்கைக்கு இடையில் நிலவுகின்ற நீண்ட கால நட்புறவை மேலும் மேம்படுத்தி தொடர்ந்து பேணுவதற்கும் பொருளாதார அபிவிருத்தி செயல்பாடுகளில் பிரான்ஸின் முதல் வரிசை முதலீட்டாளர்களை இலங்கையில் முதலீடு செய்வதற்கு ஊக்குவிப்பதற்கும் இதன்போது உடன்பாடு எட்டப்பட்டது. (அ)



# சிறுமியிடம் அத்துமீறிய பொலிஸ் அதிகாரி கைது

கொழும்பு, ஒக். 15

மொனராகலையில் பிபில பஸ் தரிப்பிடத்தில் மதுபோதையில் சிறுமியிடம் பாலியல் சேட்டையில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தர் கைதாகி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கந்தகெட்டி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்த பொலிஸ் உத்தியோகத்தர் கடந்த வெள்ளிக்கிழமை பிபில பஸ் தரிப்பிடத்தில் வைத்து 10 வயது சிறுமி ஒருவரிடம் பாலியல் சேட்டையில் ஈடுபட்டுள்ளார். இதையடுத்து, அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

# போதைப்பொருள் விற்றவர்கள் கைது!

கொழும்பு, ஒக். 15

கஞ்சா, ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டார் என்று சந்தேகிக்கப்படும் இரு இளைஞர்களை வட்டவளை பொலிஸார் நேற்று செய்துள்ளனர்.

25, 27 வயதுடைய வெலிமடை பகுதியைச் சேர்ந்த இளைஞர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் முச்சக்கரவண்டியில் கொழும்பு, மருதானையில் இருந்து ஹற்றன் வழியாக வெலிமடை வரை போதைப்பொருள்கள் விற்பனையில் ஈடுபட்டிருந்தனர்.

ஈசி கேஷ் முறையில் பணத்தை பெற்றுக்கொண்டு வீதிகளில் அடையாளம் காணப்பட்ட சில பகுதிகளில் போதைப்பொருளை வைத்து சென்றிருந்தனர் என்று பொலிஸாரின் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (ஐ)

# வீதி விபத்துகளாலேயே அதிகளவானோர் பாதிப்பு

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, ஒக். 15

வீதி விபத்துகளாலேயே அதிகளவானோர் மருத்துவமனைகளில் சேர்க்கப்படுவதாக சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

வீதி விபத்து தொடர்பில் கொழும்பில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்றில் கருத்துரைக்கும்போது அமைச்சர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

விபத்துகள் ஏற்படாமல் தடுப்பதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்குப் பயனளிக்க முடியும். ஒரு நாடு பொருளாதார வளர்ச்சியுடன் முன்நோக்கி செல்லும்போது, விபத்துகளை தடுப்பதற்கான செயல்பாடுகள் ஒவ்வொரு துறையிலும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

விபத்து தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் ஊடாக விபத்துகள் மற்றும் மருத்துவமனைகளில் ஏற்படும் தாக்கங்களையும் குறைக்க முடியும் - என்றார். (அ)

# ஐஸ் போதைப்பொருளுடன் தெகிவளையில் ஒருவர் கைது

கொழும்பு, ஒக். 15

ஐஸ் போதைப் பொருளுடன் கொழும்பு - தெகிவளையில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து ஒரு கிலோ 95 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் காலி - பூஸ்ஸ பகுதியைச் சேர்ந்த 62 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு மாவட்ட குற்றப்பிரிவு, மேற்கொண்டு வருகிறது. (ஐ)

# கடலில் மூழ்கி ஒருவர் மரணம்

சிலாபம், ஒக். 15

மீன் விற்பனையாளர்களுக்கு உதவியாளராக செயல்பட்டவர் கடலில் மூழ்கி ஒருவர் உயிரிழந்தார்.

புத்தளம், வென்னப்புவ - உல்ஹிடியாவ பகுதியில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த 65 வயதான நபர், கடற்கரையோரங்களில் மீன் விற்பனையாளர்களுக்கு உதவியாளராக செயல்பட்டு வந்துள்ளார். இந்த நிலையில் கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்டு அவர் உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் வென்னப்புவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பீடி இலைகளை கடத்திவந்த இளைஞர்கள் இருவர் கைது!

கொழும்பு, ஒக். 15

சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட பீடி இலைகளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குருநாகல் - நிக்கவெரட்டிய குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய நேற்றுமுன்தினம் இவர்கள் கைது செய்யப்பட்டர்.

அவரிகளிடமிருந்து 25 பொதிகளில் 771 கிலோ 50 கிராம் பீடி இலைகள் கைப்பற்றப்பட்டன.

கைதான சந்தேக நபர்கள் தலவில, புத்தளம் பகுதிகளைச் சேர்ந்த 26 மற்றும் 28 வயதுடையவர்களாவர்.

நிக்கவெரட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# முன்னாள் கடற்படை தளபதி பிணையில் விடுவிக்கப்பட்டார்

கொழும்பு, ஒக். 15

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் கடற்படை தளபதி நிஷாந்த உலுகேதென்ன நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டார்.

குருநாகல் நீதிவான் நீதிமன்றத்தின் உத்தரவிலேயே அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கடற்படை தளபதியாக நிஷாந்த உலுகேதென்ன பணியிலிருந்தபோது, குருநாகல் - பொத்துஹெர பிரதேசத்தில் இளைஞர் ஒருவர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளின் அடிப்படையில், நிஷாந்த உலுகேதென்ன கடந்த ஜூலை 28ஆம் திகதி குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் கீழ் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டத் தொழிலாளர்களின்

# வாழ்வாதாரத்துக்கு ஏற்ற சம்பளம் வழங்குவது இன்றியமையாதது

கொழும்பு, ஒக். 15

தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டியது அவசியம். அவர்களின் வாழ்வாதாரத்துக்கு ஏற்ற சம்பளத்தை வழங்குவது இன்றியமையாதது என்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

முன்மொழியப்பட்ட தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார, ஜனாதிபதி அலுவலகத்தில் பெருந்தோட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகளை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின்போது, தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, அவர்களுக்கு வாழ்வாதாரத்துக்கு ஏற்ற சம்பளத்தை வழங்குவது இன்றியமையாதது என்று குறிப்பிட்டார்.

இது அவர்களின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கு வழிவகுக்கும் எனவும் கூறினார்.

சம்பள உயர்வை நடைமுறைப்படுத்தும் முறைமைகள் குறித்து பெருந்தோட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, நிறுவனங்களின் பிரதிநிதிகள் சம்பள உயர்வு தொடர்பான தமது கருத்துக்களையும் நடைமுறைச் சாத்தியப்பாடுகள் குறித்த ஆலோசனைகளையும் முன்வைத்தனர்.

மேலும், தோட்டத் தொழில்துறையை மேம்படுத்துவது அரசாங்கத்தின் கொள்கையாகும் என்பதைத் தெளிவுபடுத்திய ஜனாதிபதி, இத்துறைக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அரசாங்கம் வழங்கும் என உறுதியளித்தார்.

இத்துறையின் வளர்ச்சிக்கு அரசாங்கத்தின் முழுமையான ஆதரவு தொடரும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (எ)

# தோட்டத் தொழிலாளர்களுக்கு 10 பேர்ச்சஸ் காணி வேண்டும்

## திகாம்பரம் எம். பி. தெரிவிப்பு

ஹற்றன், ஒக். 15

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 10 பேர்ச்சஸ் காணியை வழங்குவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

ஹற்றனில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பின்போது அவர் மேலும் கூறுகையில்,

தோட்டங்களை மக்களுக்கு பிரித்து கொடுத்து, அவர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்க வேண்டும்.

இந்திய வீட்டுத் திட்டத்தை விரைவில் நிறைவு செய்யுமாறு கோருகின்றேன். எமது மக்களுக்கு 10 பேர்ச்சஸ் காணிவை வழங்கினால், அவர்களால் வீடுகளை நிர்மாணித்துக்கொள்ள முடியும். அதுவே சிறந்த திட்டம்.

நாம் களவெடுக்கவில்லை. மக்களுக்கும் இது தெரியும். எனவே, அரசாங்கத்தின் ஊழல் ஒழிப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும். சில அமைச்சர்கள் பொய்யுரைப்பதுதான் பிரச்னை- என்றார். (எ)

# ஆசிரியர் உட்பட மூவர் விபத்தில் சிக்கி காயம்

நுவரெலியா, ஒக். 15

கொட்டக்கலை பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஆசிரியர் ஒருவர் உட்பட மூவர் காயமடைந்தனர்.

இந்த விபத்து நேற்றுக் காலை 08.15 மணியளவில் ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியில், கொட்டக்கலை எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் இடம்பெற்றது.

பொலிஸ் தகவலின்படி, கொட்டக்கலையிலிருந்து ஹற்றன் நோக்கி தனது மகனுடன் மோட்டார் சைக்கிளில் சென்ற சாரதி ஒருவர், முன்னால் சென்ற ஓட்டோவை முந்திச் செல்ல முயன்றபோது, எதிர்திசையில் ஹற்றனில் இருந்து தலவாக்கலை நோக்கிச் சென்ற மற்றொரு மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதியுள்ளார்.

இதில், ஹற்றனில் இருந்து தலவாக்கலை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளில் இருந்த இருவர் உட்பட மூவர் காயமடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்தில் சிக்கிய இரண்டு மோட்டார் சைக்கிள்களும் கடுமையாக சேதமடைந்துள்ளன.

இரு வாகனங்களின் அதிவேகமே விபத்துக்குக் காரணமாக இருக்கலாம் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக திம்புல பத்தனை பொலிஸார் கூறினர். (எ)


# கல்குடாவில் பத்து பரல் கசிப்புடன் ஒருவர் கைது

மட்டக்களப்பு, ஒக். 15

வாழைச்சேனை கிண்ணையடி பிரம்படி தீவு பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் அவரை கைது செய்வதற்கு தடையாக இருந்த ஐந்து பெண்களும் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து வாழைச்சேனை பொலிஸ் நிலைய ஊழல் ஒழிப்புப் பிரிவு பொறுப்பதிகாரி கே.எஸ்.பி.அசங்க தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக கிண்ணையடி பிரம்படித்தீவு ஆற்றில் இருந்து மறைத்து வைக்கப்பட்டிருந்த பத்து பரல்களில் 1685 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கசிப்பு உற்பத்தியுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பெயரில் அதே பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டார். அவர் எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (எ)



# குருக்கள்மடம் பகுதியில் நேற்று கோர விபத்து!

## மூவர் மருத்துவமனையில் அனுமதி

மட்டக்களப்பு, ஒக். 15

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருக்கள்மடம் பகுதியில் கார் ஒன்று வீதியைவிட்டு விலகி மதகுடன் மோதி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்து நேற்றுக் காலை இடம்பெற்றது.

கொழும்பிலிருந்து சம்மாந்துறை நோக்கிப் பயணித்த கார் குருக்கள்மடம் முருகன் ஆலயத்துக்கு முன்னால் விபத்துக்குள்ளானது. காரில் மூன்று பேர் பயணித்த நிலையில் அவர்கள் காயங்களுக்குள்ளாகி களுவாஞ்சிக்குடி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இவ்விபத்து சம்பவத்தில் உயர்ச்சேதம் ஏற்படாமல் தெய்வாதீனமாக தப்பினர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி போக்குவரத்துப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

வேகக்கட்டுப்பாட்டை இழந்து, வீதியை விட்டு விலகியதால் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியின் குருக்கள்மடம் பகுதியில் அதிகளவான வளைவுகள் காணப்படுவதாகவும் மிக அவதானமாக வாகனங்களை செலுத்துமாறும் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சம்மாந்துறையில் புத்தக கண்காட்சி

சம்மாந்துறை, ஒக். 15

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பிரதேச சபையின் கீழ் செயல்படும் நூலகங்களின் ஏற்பாட்டில் நடத்தப்படும் மாபெரும் புத்தகக் கண்காட்சி சம்மாந்துறை அப்துல் மஜீட் மண்டப வளாகத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ள இந்தக் கண்காட்சி எதிர்வரும் சனி, ஞாயிறு மற்றும் திங்கட்கிழமை ஆகிய மூன்று தினங்கள் காலை 09.00 மணி முதல் இரவு 09.00 மணி வரை நடைபெறவுள்ளது.

இந்த புத்தகக் கண்காட்சியில் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என அனைவரும் கலந்து கொள்ள முடியும் என சம்மாந்துறை பிரதேச சபை அறிவித்துள்ளது. (எ-06)

# சிங்கள மொழி பயிற்சிநெறி பூர்த்தி: உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ்

சம்மாந்துறை, ஒக். 15

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் அரச ஊழியர்களுக்காக நடத்தப்பட்ட 100 மணித்தியாலம் இரண்டாம் மொழி சிங்கள பயிற்சி நெறியை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அம்பாறை, சம்மாந்துறை பிரதேச சபையின் பிரதான கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். மேலும், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா, சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே. முஹம்மட், சம்மாந்துறை பிரதேச சபையின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எஸ்.சுல்பா, இரண்டாம் மொழி பாட வளவாளர்களான என்.எம். புவாட், ஆர்.பி.சந்துனி மஹேஷிகா விஜயந்தி ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்து கொண்டனர். (எ- 06)

# உள்ளூர் உற்பத்திகளின் சந்தை மற்றும் கண்காட்சி

மட்டக்களப்பு, ஒக். 15

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட உள்ளூர் உற்பத்தி விற்பனையாளர்களின் சந்தை மற்றும் கண்காட்சி நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிரதேச செயலாளர் உ. உதயசிறீதர் தலைமையில் உதவி பிரதேச செயலாளர் சத்யகௌரி தரணிதனின் பங்குபற்றுதலுடன் பிரதேச செயலகத்துக்கு அருகாமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்பை பெற்றுக் கொடுப்பதுடன், நுகர்வோர்களிடம் இருந்து வருகின்ற கேள்விகள் மற்றும் விற்பனை வாய்ப்புகளை சலுகை விலையில் மக்கள் கொள்வனவு செய்வதற்கு இந்தக் கண்காட்சி மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன்போது பிரதேச செயலக பிரிவிலிருந்து 20 இற்கும் மேற்பட்ட தொழில் முயற்சியாளர்கள் தங்களது உற்பத்தி மற்றும் கைவினை பொருட்களை காட்சிப்படுத்தியதுடன், விற்பனையும் செய்தனர்.

இந்த நிகழ்வில் பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், பொது மக்கள் மற்றும் விற்பனையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராஜீவின்...

ராஜிவ் காந்தியை பொறுத்தவரை, அவர் இந்தியாவின் மற்றும் இலங்கையின் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க வேண்டியது அவசியம் என்பதில் உறுதியாக இருந்தார். எனினும் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின், இலங்கை தொடர்பான பின்னடைவுக்கு இராணுவம் தான் காரணம் என்று மணி சங்கர் ஐயர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், இலங்கை பிளவுபடுவதைத் தடுக்கவும், தமிழ்நாட்டில் பிரிவினைவாத உணர்வுகளைத் தூண்டக்கூடிய எந்தவொரு தாக்கத்தையும் தடுக்கவும், 1987 ஒப்பந்தத்தையும் இந்திய அமைதிப் படையை அனுப்பும் முடிவையும் மணி சங்கர் ஐயர் ஆதரித்துள்ளார்.

இலங்கையின் சிதைவு, இந்தியாவில் சிதைவை ஏற்படுத்தும் என்பதையும் ராஜீவ் அறிந்திருந்தார் என்றும் அவர் கூறியுள்ளார்.

எனினும் இந்திய இராணுவம் அவரை ஏமாற்றியது. இந்திய உளவுத் துறை அவரை ஏமாற்றியது என்று மணி சங்கர் ஐயர் குற்றம் சுமத்தினார். (அ)

## இஷாரா...

உட்பட ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

தலைநகர் காத்மாண்டுவில் இருந்து சுமார் 20 கிலோமீற்றர் தொலைவில் உள்ள பகுதியில் வைத்து குறித்த அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களில் கம்பஹா மற்றும் நுகேகொடையைச் சேர்ந்த இருவர் மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தம்பதியினர் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## போர்க்....

பாடசாலை மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் நீதிமன்றத்தினால் பிரதான குற்றவாளியாகப் பெயரிடப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ, அப்படுகொலை குறித்தும், செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம் குறித்தும் தன்னிடம் கூறிய விடயங்களை உள்ளடக்கியும், இவ்விவகாரம் தொடர்பில் மீண்டும் சுயாதீன விசாரணையைக் கோரியும் அவரது மனைவி எஸ்.சி.விஜேவிக்ரம ஊடாக 09.07.2025 எனும் திகதியிடப்பட்ட கடிதமொன்றை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அனுப்பி வைத்திருந்தார்.

அதனைத்தொடர்ந்து 1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தில் நிகழ்த்திய குற்றங்கள், வலிந்து காணாமலாக்கப்படல்கள் மற்றும் மனிதப்புதைகுழிகள் தொடர்பில் உண்மைகளை வெளிப்படுத்துவதற்குத் தயாராக இருப்பதாகவும் சோமரத்ன ராஜபக்ஷ அறிவித்திருந்தார். அதுமாத்திரமன்றி இந்த உண்மைகளை வெளிப்படுத்துவதற்குத் தயாராக இருப்பதாக சத்தியக்கடதாசி வழங்குவதற்கும் அவர் இணங்கியிருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் மேற்குறிப்பிட்ட விடயங்களுடன் தொடர்புடைய சில உண்மைகளையும், எதிர்வருங்காலங்களில் சாட்சியம் வழங்குவதற்குத் தயாராக உள்ள விடயங்களையும் உள்ளடக்கி கடந்த 4 ஆம் திகதி சிறைச்சாலையில் சோமரத்ன ராஜபக்ஷ தனது சட்டத்தரணி முன்னிலையில் சத்தியக்கடதாசி வழங்கியுள்ளார்.

இந்த சத்தியக் கடதாசியின் ஒரு பிரதி கடந்த வார நடுப்பகுதியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்திடம் கையளிக்கப்பட்டதுடன், மற்றுமொரு பிரதி இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தின் அதிகாரிகளிடம் இவ்வாரம் கையளிக்கப்படவுள்ளது. அத்தோடு மேலும் ஒரு பிரதி இலங்கையில் இயங்கிவரும் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்திடம் கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## வெளிநாடுகளுக்கு...

பதிவு செய்யப்பட்ட நிலையில், யாழ். நிதிக் குற்றத்தடுப்புப் பிரிவின ரால், கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டனர்.

குறித்த சந்தேக நபர், மல்லாகம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட வேளை, எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ)

## ஆளுநர்கள்...

அடிப்படையில் ஜனாதிபதியின் முடிவுகள் அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழர்களின் ஈடுபாடு உள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை ஜனாதிபதி செயலகம் ஓரளவு திருப்தி கொண்டிருப்பதாக அந்த வட்டாரங்கள் குறிப்பிட்டன.

பெரிய சர்ச்சைகளை ஏற்படுத்தாமல், நிர்வாக நடவடிக்கைகளை வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்னெடுத்துச் செல்வதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்களில் அறிய முடிகிறது.

என்றாலும், செயல்பாடுகளில் திருப்தி இல்லாத சில மாகாண ஆளுநர்கள் குறித்து ஜனாதிபதி அவதானம் செலுத்தியுள்ளதாகவும் அறிய முடிகிறது. (அ)

## இந்திய...

பிரதிநிதித்துவம் செய்து நவ்யா சிங்லாவும் இணைந்து கொண்டார்.

இதன்போது, நாட்டின் நிகழ்கால நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன், இந்திய தூதுவர் கலந்துகொண்ட வீடுகளற்ற மலையக மக்களுக்கு வீட்டுரிமைகளை பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டத்தின் வெற்றி குறித்தும் கலந்துரையாடப்பட் டது.

எதிர்காலத்தில் இவற்றுடன் சம்பந்தப்பட்ட உதவிகளை வழங்குவதாகவும் இந்திய தூதுவர் தெரிவித்தார்.

இந்த வீடுகளை வழங்கும் கருத்திட்டத்துக்கு இந்தியா வழங்கிய ஒத்துழைப்புக்கு ரில்வின் சில்வா இந்திய அரசாங்கத்திற்கும் இந்திய மக்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொண்டார்.

எதிர்வரும் காலத்தில் இந்திய முதலீடுகள் மற்றும் நன்கொடைகளை பெற்றுக்கொள்ளுதல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன், விவசாயம், தகவல் தொழில்நுட்பம், கடல் தொழிற்றுறை ஆகிய துறைகளில் இந்தியா பெற்றுக்கொண்ட முன்னேற்றம் பற்றிய அனுபவம் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (அ)

## கோப்பாய்....

சொந்தமான 9 உரிமையாளர்கள் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தனர்

வழக்கு கடந்த 6 ஆண்டுகளாக யாழ் மாவட்ட நீதிமன்றத்தில் நடந்த நிலையில், கடந்த ஜூன் மாதம் 27ஆம் திகதி வழக்கின் தீர்ப்பு அறிவிக்கப்பட்டது.

அதன்போது பொது மக்களின் காணியிலிருந்து வெளியேறி, அந்த காணியை உரிமையாளர்களிடம் கையளிக்க வேண்டுமென மாவட்ட நீதிபதி சி.சதீஸ்கரன் உத்தரவிட்டார்.

எனினும், இரண்டு மாதங்களுக்கு மேலாகியும் இதுவரை பொலிஸார் காணியை உரிமையாளர்களிடம் கையளிக்கவில்லை.

இந்த நிலையில், இன்று புதன்கிழமை நீதிமன்ற உத்தரவை நிறைவேற்ற, நீதிமன்ற பதிவாளர் கோப்பாய் பொலிஸ் நிலையம் அமைந்துள்ள பகுதிக்கு சென்று, அங்குள்ள பொலிஸாரை வெளியேற்றி, காணியை உரிமையாளர்களிடம் கையளிக்கவுள்ளார்.

அதேவேளை கோப்பாய் பொலிஸ் நிலையத்தை உரும்பிராய் பகுதிக்கு மாற்றும் நடவடிக்கைகள் நடந்து வருகின்றன. பகுதியளவில் இடமாற்ற நடவடிக்கைகள் முடிந்துள்ளன. எனினும், முழுமையான இடமாற்றம் நடந்து முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# வங்காள விரிகுடாவில் காற்றுச்சுழற்சி வடக்கு-கிழக்கில் இடியுடன் கடும்மழை!

யாழ்ப்பாணம், ஒக். 15

இலங்கைக்கு தென்கிழக்காக வங்காள விரிகுடாவில் இன்று காற்றுச் சுழற்சி ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளது. இது மேற்கு திசை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறதுஎன யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியற்துறை பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவரால் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

2025/2026 ஆம் ஆண்டுக்கான வடகீழ்ப் பருவக்காற்று தொடங்குவதற்கான ஏது நிலைகள் வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ளன.

வங்காள விரிகுடாவில் கீழை அலைகளின் வருகை, இந்து சமுத்திர மேற்பரப்பு வெப்பநிலை மாற்றம், மேடன் ஜூலியன் அலையின் வருகை. நேற்று மாலை இவ்வலையின் வருகை தெற்கு இந்து சமுத்திரத்தில் பதிவாகியுள்ளது.

மேடன்-ஜூலியன் அலைவு என்பது அயனமண்டல வளிமண்டலத்தில் ஏற்படும் மிகப்பெரிய, இயற்கையான, 30 முதல் 90 நாள் வரையிலான கால இடைவெளியில் மாறும் ஒரு வானிலை நிகழ்வாகும்.

வடகீழ்ப் பருவமழை உட்பட, உலகின் பல்வேறு பகுதிகளில் வானிலை மற்றும் மழைவீழ்ச்சி மீது இந்த அலைவு குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இது புயல்களின் உருவாக்கத்திற்கும், தீவிரமடைதலுக்கும் காரணமாக அமைகிறது.

உதாரணமாக, வங்காள விரிகுடாவில் புயல் உருவாகும் போது, மேடன்-ஜூலியன் அலைவின் தாக்கம் காரணமாக அதன் தீவிரமடைதல் அதிகரிக்கலாம்.

அயன இடை ஒருங்கல் வலயத்தின் விரிவாக்கம் இலங்கை, தென்னிந்திய மற்றும் வங்காள விரிகுடாவையும் உள்ளடக்கியுள்ளமையின் காரணமாக எதிர்வரும் 18.10.2025 அன்று இலங்கையின் வடக்கு- கிழக்கு கரையோரத்தில் இவ்வாண்டின் வடகீழ்ப் பருவ மழை ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை தற்போது வங்காள விரிகுடாவிற்கு வந்துள்ள மேடன் ஜூலியன் அலைவு எதிர்வரும் நவம்பர் 10 ம் திகதி வரை வங்காள விரிகுடாவில் நீடிக்கும் என்பதனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மழைவீழ்ச்சி எதிர்வரும் 10.11.2025 வரை தொடரும்.

குறிப்பாக 16- 19, மற்றும் 22-31 காலப்பகுதிகளில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் கனமானது முதல் மிகக்கன மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

இடி மின்னலோடு இணைந்ததாகவே இம்மழை இருக்கும் என்பதனால் இடி மின்னல் நிகழ்வுகள் தொடர்பில் பொதுமக்கள் அவதானமாக இருப்பது அவசியம்.

எதிர்வரும் 15, 16, 17, 18, மற்றும் 19ஆம் திகதிகளில் மத்திய மாகாணம், தென் மாகாணம், மேல் மாகாணம், ஊவா மற்றும் சபரகமுவா மாகாணங்களில் கனமானது முதல் மிகக்கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. இந்நாட்களில் கிடைக்கும் கனமழை காரணமாக பல இடங்களில் மண்சரிவுக்கான வாய்ப்புக்கள் உள்ளன.

இன்று முதல் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை வடக்கு, கிழக்கு, தெற்கு கடற்பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு 40 கி.மீ. காணப்படும். இப்பிரதேச கடற்கரையோரங்களில் காற்றின் வேகம் மணிக்கு 30 கி.மீ. வேகத்தில் காணப்படும்.

நாளை முதல் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை இலங்கையின் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு கடல் பிராந்தியங்கள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதனால் மீனவர்கள் கடலுக்கு செல்வதில் அவதானமாக இருப்பது அவசியம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# நம்பிக்கையில்லா தீர்மானத்தால் அரசாங்கம் அஞ்சப்போவதில்லை!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, ஒக்.15

எதிர்க்கட்சியினால், முன்வைக்கப்படும் எந்தவொரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கண்டும், அரசாங்கம் அஞ்சப்போவதில்லை என அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு பிரதி அமைச்சருக்கு எதிராக, எதிர்கட்சி கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை சபாநாயகர் நிராகரித்திருந்தார்.

இந்தநிலையில், மீண்டும் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வர எதிர்க்கட்சிகள் நடவடிக்கை எடுத்து வருவது தொடர்பாக, அரசாங்கத்தின் நிலைபாடு என்னவென்பது குறித்து வினவிய போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தாம் கொண்டுவரும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில், தோல்வி ஏற்படும் என அறிந்திருந்தாலும், எதையாவது செய்வதற்கு எதிர்க்கட்சிகள் முயற்சிக்கின்றன.

எனினும், நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு அரசாங்கம் அச்சமடையாது என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## இரண்டாவது...

கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவஞானம் சிறீதரன் ஆகியோர் கலந்து, போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடினர்.

வடக்கு மாகாண கல்வி திணைக்களத்தினால் சேவையின் தேவை கருதிய ஆசிரியர் இடமாற்ற கொள்கையை சரியான முறையில் நடைமுறைப்படுத்துமாறும், தற்போது உள்ள ஆசிரியர் இடமாற்றத்தில் அரசியல் பாகுபாடு மற்றும் பழிவாங்கல்

காணப்படுவதுடன் அந்த இடமாற்றங்களில் பல குறைபாடுகள் உள்ளதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன்போது கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் குறித்த விடயம் தொடர்பில் ஆளுநருடன் கலந்துரையாடுவதாக தெரிவித்தனர். (அ)

## எதிர்வரும்...

கொழும்பில் இடம்பெறும் விசேட செய்தியாளர் சந்திப்பில் அந்த ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் கே.எல். சந்திரலால் இதனை அறிவித்தார்.

முன்னதாக, 6.8 வீதத்தினால் மின்சார கட்டணம் அதிகரிக்கப்படவேண்டும் என இலங்கை மின்சார சபை, இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு முன்மொழிவுகளை முன்வைத்திருந்தது.

இது தொடர்பில், தொடர்புடைய தரப்பினர்களிடம் அந்த ஆணைக்குழு கருத்துகளையும் ஆலோசனைகளையும் கோரியிருந்தன.

அவற்றை பரிசீலித்ததையடுத்து, மின்சார கட்டணத்தில் எந்தவித மாற்றத்தையும் மேற்கொள்ளாது எதிர்வரும் 3 மாதங்களுக்கு தற்போதைய கட்டணத்தையே பேணிச் செல்வதற்கு ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu




## சிறந்த ஊடக ஆளுமைக்காக துவாரகிக்கு லண்டனில் விருது

லண்டன், ஒக். 15

பிரித்தானியாவில் வருடாந்தம் நடைபெறும் "சுடரி விருது" விழாவில் 2025ஆம் ஆண்டுக்கான சிறந்த ஊடக ஆளுமைக்கான விருது ஊடகவியலாளரும் ஆய்வாளருமான துவாரகி சுந்தரமூர்த்திக்கு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ் மகளிர் அபிவிருத்தி மன்றத்தின் ஏற்பாட்டில் இலங்கையிலும் புலத்திலும் வாழும் சமூகம் சார்ந்து உழைத்துக் கொண்டிருக்கும் சாதனை பெண்களை கௌரவிக்கும் இந்த விழா பிரித்தானியாவின் ஹேய்ஸ் பகுதியில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சட்டத்தரணியும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான ரனித்தா ஞானராஜா பங்கேற்றிருந்தார்.

'Digital Media & Production - Emerging Leader' என்ற விருதைப் பெற்றுள்ள ஊடகவியலாளர் துவாரகி சுந்தரமூர்த்தி, தனியார் செய்தி ஊடகத்தில் செய்தி ஆசிரியராகப் பணிபுரிந்ததுடன் இலங்கை ஊடகத்துறை அமைச்சிலும் கடமையாற்றியிருந்தார்.

தெற்காசிய சட்ட ஆய்வு மையம் மற்றும் அடையாளம் - மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையத்தில் ஆய்வாளராகவும் அவர் கடமையாற்றியிருந்தார்.

இதன்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், இராணுவத்தினரால் சுவீகரிக்கப்படும் தனியார் காணிகள், போரால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவத்தினர், போரின் பின்னர் முன்னாள் பேராளிகள் எதிர்நோக்கும் அவலங்கள் உள்ளிட்ட பல்வேறு செய்திகள் மற்றும் செய்தி ஆவணப்படுத்தல்களை அவர் மேற்கொண்டிருந்தார்.

அத்துடன், தற்போது இலத்திரனியல் ஊடகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளுடன் தொடர்புடைய பயிற்சி வகுப்புகளையும் அவர் மேற்கொண்டு வருகிறார் - என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மோட்டார் வாகனங்களுக்கான இறக்குமதி வரியை குறைக்கவும்

### அரசாங்கத்திடம் கோரிக்கை

கொழும்பு, ஒக். 15

மோட்டார் வாகனங்களுக்கு விதிக்கப்படும் வரியை குறைக்குமாறு வாகன இறக்குமதியாளர்கள் குழு ஒன்று அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதன்படி, 2026 ஆம் ஆண்டுக்கான பாதீட்டுக்கான முன்மொழிவாக வாகன இறக்குமதியாளர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

சாதாரண பொதுமகன் ஒருவரும் வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்யும் வாய்ப்பை பெறும் வகையில், வரிகளை குறைக்குமாறு வாகன இறக்குமதியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த நிலையில், கடந்த ஜனவரி 28ஆம் திகதி அரசாங்கம் வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கிய பின்னர், ஓகஸ்ட் வரை 91.8 கோடி அமெரிக்க டொலர் மதிப்புள்ள வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அத்துடன், ஒகஸ்ட் மாதத்தில் 24. 9 கோடி அமெரிக்க டொலர் மதிப்புள்ள வாகனங்கள் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

# மாணிக்க கங்கைக்கு அருகில் உள்ள கட்டடம் எனக்குச் சொந்தமானதல்ல!

### கோட்டாபய ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 15

**"கதிர்காமம் மாணிக்க கங்கைக்கு அருகில் அமைந்துள்ள கட்டடம் எனக்குச் சொந்தமானது அல்ல. "**

-இவ்வாறு தெரிவித்துள்லார் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

தனது சமூக ஊடகக் கணக்கில் ஒரு பதிவை வெளியிட்ட முன்னாள் ஜனாதிபதி, கதிர்காமம் பகுதியில் எந்தவொரு கட்டடத்தையும்

கட்டுவதற்கோ அல்லது பராமரிப்பதற்கோ தனக்கு எந்த காரணமோ ஆர்வமோ இருந்ததில்லை என்றும் கூறியுள்ளார்.

ஊடகங்களில் பரவும் செய்தி முற்றிலும் தவறானது என்றும் அவர் கூறியுள்ளார்.

அந்த சமூக ஊடகப் பதிவு பின்வருமாறு-

கதிர்காமம் மாணிக்க கங்கைக்கு அருகில் வேறொருவரால் கட்டப்பட்ட கட்டடம் எனக்குச் சொந்தமானது என்று அவ்வப்போது ஊடகங்களில் ஒரு செய்தி வெளியிடப்பட்டிருப்பது கவனிக்கப்படுகிறது.

ஒக்ரோபர் 13, 2025 திங்கட்கிழமை), சில தொலைக்காட்சி அலைவரிசைகளில் வெளியிடப்பட்ட செய்தியில் அந்தக் கட்டடத்தைக் குறிப்பிடும்போது எனது பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி கட்டடத்தின் உரிமை குறித்து கடந்த காலத்தில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் விசாரணை நடத்தப்பட்டது.

அந்த விசாரணை தொடர்பாக நானும் ஒரு அறிக்கையை அளித்தேன்.

இது குறித்து என்னிடம் கேட்கப்பட்டதற்கான காரணம், அந்தக் கட்டடத்துக்கு மின்சார இணைப்பைப் பெறுவதற்காக ஒரு ஜி.ராஜபக்ஷவின் பெயரில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் மட்டுமே.

விண்ணப்பத்தில் முறையான கையொப்பம் இல்லை. கையொப்பம் இருக்க வேண்டிய இடத்தில், ஒரு படிக்க முடியாத எழுத்து இருந்தது.

இந்த தவறான செய்தி அவ்வப்போது வெளிவருவதாலும், அனைவரின் தகவலுக்காகவும், கதிர்காமத்தில் உள்ள மாணிக்க கங்கைக்கு அருகில் உள்ள கட்டிடம் எனது சொத்து அல்ல என்பதை நான் உறுதியாக அறிவிக்கிறேன்.

கதிர்காமப் பகுதியில் எந்தவொரு கட்டிடத்தையும் கட்டவோ அல்லது பராமரிக்கவோ எனக்கு எந்த காரணமோ விருப்பமோ இருந்ததில்லை என்பதையும் கூற வேண்டும்-எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## 7 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 15

தற்போது நிலவும் பலத்த மழையால் கண்டி, கேகாலை மாவட்டங்களுக்கு இரண்டாம் நிலை மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

அத்துடன், பதுளை, மாத்தளை, மொனராகலை, நுவரெலியா, இரத்தினபுரி மாவட்டங்களுக்கு முதலாம்நிலை முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டங்களில் வசிக்கும் மக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்குமாறு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

## சஷீந்திர ராஜபக்ஷவுக்கு பிணை

கொழும்பு, ஒக். 15

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷவை பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அவர் நேற்றைய தினம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோதே அவருக்கு பிணை அனுமதி வழங்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களின்போது தீக்கிரையாக்கப்பட்ட செவனகல - கிரிப்பன் வேவ பகுதியில் உள்ள அரசாங்க நிலத்துக்கு மற்றொரு நபர் மூலம் இழப்பீடு பெற்ற சம்பவம் தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ கடந்த ஓகஸ்ட் 06 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார். (ஐ)

## ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டு; ஐ.தே.க. இன்று முக்கிய தீர்மானம்!

கொழும்பு, ஒக். 15

"இந்த அரசாங்கம் வீழ்ச்சியடைந்தால் நாட்டை பொறுப்பேற்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராகவே உள்ளது." என்று அக்கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பவற்றின் இணைந்த பயணம் தொடர்பில் நாளை புதன்கிழமை சாதகமானதொரு முடிவு எடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

பொய்யுரைக்கும் அரசியலை முடிவுக்கு கொண்டுவருவதற்கும், நாட்டுக்காக பொதுவானதொரு வேலைத் திட்டத்துடன் முன்னோக்கி செல்வதற்கும் நாட்டு மக்கள் முன்வந்துள்ளனர்.

2022 ஜூலை மாதம் 8 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியெற்றபோது, தேசிய வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு இணையுமாறு அழைப்பு விடுத்தார். இந்த திட்டத்துக்கு அப்பால் சென்று எதையும் செய்ய முடியாது.

அவ்வாறு செய்ய முடியும் எனக் கூறுவது பொய்யாகும். அவ்வாறு பொய்யுரைத்தால் மக்கள் அவர்களை வீதியில் தாக்குதல் நிலை ஏற்படும்.

ஐக்கிய மக்கள் சக்தி எடுத்த தீர்மானம் பற்றி புதன்கிழமை நடைபெறும் ஐக்கிய தேசியக் கட்சியின் முகாமைத்துவக் குழு மற்றும் செயற்குழு கூட்டங்களில் ஆராயப்பட்டு, சாதகமான முடிவு எடுக்கப்படும்.

ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்த பயணத்தைவிட சிறப்பான பயணத்தை இந்த அரசாங்கத்தால் முன்னெடுக்க முடியுமா? முடியாது என்பதே எனது கருத்தாகும். நாம் கொண்டுவந்த சட்டத், திட்டங்கள் மீறப்பட்டுவருகின்றன.

அப்படியானால் அரசின் வீழ்ச்சி ஆரம்பமாகின்றது. அவ்வாறான நிலை ஏற்பட்டால் நாட்டை ஐ.தே.க. பொறுப்பேற்கும். அது பற்றி குழப்பமடையத் தேவையில்லை-என்றார். (அ)

## மின்சார சபை தொழிற்சங்கங்களின் தொழிற்சங்க போராட்டம் நிறைவு!

கொழும்பு, ஒக். 15

தாங்கள் முன்னெடுத்துள்ள சட்டப்படி வேலைசெய்யும் தொழிற்சங்க நடவடிக்கையை உடனடியாகக் கைவிட்டுள்ளன என்று இலங்கை மின்சார சபை தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

தங்கள் கோரிக்கைகள் தொடர்பாக எட்டப்பட்ட வாய்மொழி ஒப்பந்தங்களுக்கான எழுத்துபூர்வமான உறுதிமொழியை பெற்றதைத் தொடர்ந்து இந்தத் தீர்மானத்தை தாம் எடுத்துள்ளன என்றும் அவை தெரிவித்தன.

இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்கும் அரசாங்கத்தின் திட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் ஊழியர்களின் உரிமைகளுக்கான உத்தரவாதங்களை பெறுவதற்காகவும் கடந்த செப்ரெம்பர் 4ஆம் திகதி முதல் சட்டப்படி வேலைசெய்யும் போராட்டத்தில் தொழிற்சங்கங்கள் ஈடுபட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கை பயணமாவோருக்கு அமெரிக்கா பயண ஆலோசனை

நியூயோர்க், ஒக். 15

இலங்கைக்கான பயண ஆலோசனைகளை அமெரிக்கா புதுப்பித்துள்ளது. இதன்படி, இலங்கையில் தற்போது அகற்றப்படும் கண்ணிவெடிகள், அமைதியின்மை தொடர்பில் அமெரிக்கர்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், அரசியல் மற்றும் பொருளாதார பிரச்னைகளால் போராட்டங்கள் முன்னெடுக்கப்படலாம். சுற்றுலா பிரதேசங்கள் வானூர்தி நிலையங்கள் மற்றும் ஏனைய முக்கியமான பகுதிகள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்படலாம்.

உள்நாட்டு போரில் புதையுண்ட கண்ணிவெடிகள் வெடிக்காத நிலையில் தற்போது கண்டெடுக்கப்படுகின்றன. எனவே, அவை குறித்தும் அவதானத்துடன் செயல்பட வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கை அதிகாரிகளின் அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும் எனவும் அமெரிக்கா, தமது நாட்டவர்களுக்கு வெளியிட்டுள்ள பயண ஆலோசனையில் கோரியுள்ளது.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.10.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org